தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௬	திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௨ விகிருதி—மாசி 1951—பிப்ரவரி	மலர் ௰௧

மகிழ்ச்சி.

திருக் கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்து 20-ஆவது பட்டத்தில் வீற்றிருந்து அருட் செங்கோல் செலுத்திவரும் குருமகா சந்நிதானம் அருட்டிரு. அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் நம் புரட்டாசிப் பொழிலில் குறிப்பிட்டிருந்தபடி தஞ்சைமா வட்டத்தினின்றும் போந்து திருவானைக்கா, திருவரங்கம், திருச்சிராப்பள்ளி, திருத்தவத்துறை, உத்தமர்கோயில், பிச்சாண்டார் கோயில், மணச்சநல்லூர், விராலிமலை, மணிகண்டம், கோயில் பட்டி, துவரங்குரிச்சி, கொட்டாம்பட்டி, மேலூர், அழகர் கோயில், மதுரை, திருப்பரங்குன்றம், திருமங்கலம், விருதுநகர், சாத்தூர், கோயிற்பட்டி, கயத்தாறு, கங்கை கொண்டான். தாழையூற்று, தச்சநல்லூர், சிந்துபூந்துறை, திருநெல்வேலி, செயதுங்கநல்லூர், சீவைகுண்டம், ஆழ்வார் திருநகரி, தூதுக்குடி, வாகைக்குளம், திருச்செந்தூர், கருங்குளம், மூலைக்கருப்பட்டி, நாங்குனேரி, வள்ளியூர், பனைக்குடி, பழவூர், கன்னியாகுமரி, சுசீந்திரம், நாகர்கோயில், ஆரல்வாய்மொழி, கல்லிடைக்குரிச்சி, திருக்குறுங்குடி, களக்காடு, வடகரை, சேரமாதேவி, கோடாரங்குளம், செவ்வந்திபுரம், பாவநாசம், விக்கிரமசிங்கபுரம், கடயம், தென்காசி, திருக்குற்றாலம், செங்கோட்டை, மேற்கரை, கடயநல்லூர், புளியங்குடி, சங்கரநயினார்கோயில், நமச்சிவாயபுரம், கூனங்குளம், அரசபாளையம், சீவில்லிபுத்தூர், திருத்தங்கல், அறுப்புக்கோட்டை, திருச்சுழியல், கமுதி, பார்த்திபனூர், மானாமதுரை, சிவகங்கை, காளையார்கோயில், திருப்போர்க்

கோட்டை, ஆளுடையார்கோயில், நெற்குப்பை, பூவுற்றகுடி, திருச்சிற்றேமம், பட்டுக்கோட்டை, தம்பிக்கோட்டை, மதுக்கூர், மன்னார்குடி, திருக்கொள்ளம்பூதூர், குடவாயில், கண்டரமாணிக்கம், முதலான திருப்பதிகள் கண்டு வணங்கி ஆங்காங்கு அடியார்களும் அன்பர்களும் ஆற்றிய பணிச் சிறப்புகளை ஏற்றருளிச் சைவம் தழைக்க அறிவுரை யருளியும் திருவுலாப் போந்தும் கொலு வீற்றிருந்து காட்சி யருளியும் அன்பர்கள் மகிழவும் அடியார்கள் குதூகலிக்கவும் உலகம் உய்யவும் 5 திங்களுக்கு முன் தொடங்கிய பயணத்தைத் திருவருள் துணைகொண்டு மேன்மையாக வெற்றி முழக்கத்துடன் நிறைவேற்றி விகிருதி, தை, ௨௰ ஆம் நாள் புதன்கிழமை பிற்பகல் திருவீழிமிழலை சேர்ந்து அங்குத் தங்கி தை ௨௰௬ திங்கட்கிழமை முற்பகல் திருவோலக்கத்துடன் திருவாவடுதுறைக்கு எழுந்தருளி ஆதீன முதற்குருமூர்த்திகளாகிய ஸ்ரீநமச்சிவாய மூர்த்திகளை வணங்கி குருபூசைஆற்றி சைவம் பரப்பி திருவுலாப் போந்து அடியார்கள் எத்தெடுப்ப திருவருள் துணைபெருக கொலு வீற்றிருந்து காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுபோது, குருபூசை நினைவு மலராக "பாரதத் தாபரிய சங்கிரகம்" என்னும் நூல் வெளியிட்டு அடியார்கட்கெல்லாம் வழங்கப்பெற்றது.

குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளிய இடங்களிலெல்லாம் வான் முகில் வழாது பெய்ய மலிவளம் சுரக்க அடியார்கள் இன்பம்பெற, மக்களெல்லாம் மகிழ்கூர்ந்து குதூகலித்து ஆற்றிய சிறப்புக்களை ஏற்று அருள்புரிந்தார்கள். நலம்.

* * * * *

பாராட்டு வாழ்த்து.

நம் சங்கப் பேரன்பர்களும், வாணாளுறுப்பினருமாகிய திருவாளர்கள் கூத்தாநல்லூர் திரு. ஜ. ம. அப்துல் அஜீஸ் சாகிபு அவர்களும், கரந்தை, திரு. த. சிவ. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும் பொதுவாக நாட்டுக்காற்றும் பொதுப் பணிகளையும் சங்கத்திற்காற்றும் சிறப்புப் பணிகளையும் பாராட்டி விகிருதி, தை, ௨௬ ஆம் நாள் நம் சங்கப் பெருமன்றத்தில் வாழ்த்து கூறப்பட்டது. இவ்வாழ்த்துக் கூட்டத்தில் எவ்வகையினரும் கலந்து கொண்டார்கள்.

யாழும் வீணையும்.

திருமந்திரமணி, துடிசைகிழார், அ. சிதம்பரனுர்.

(முற்றொடர்ச்சி : துணர் உக, மலர் ௰, பக்கம் 320)

இங்கேயும் யாழுக்கும் வீணைக்கும் பதினெட்டு உறுப்புக்களே காட்டப்பட்டுள்ளன. வேற்றுமை இல்லை. பாணர் கை வழியில் கூறப்பட்ட பெயர்களும், கொங்குமலரில் கூறப்பட்ட பெயர்களும் சிறிது மாறுபட்டிருந்த போதிலும் அவை குறிக்கும் பொருளில் யாதொரு வேற்றுமையும் இல்லை.

(C) யாழ் வகை.

> 'ஆயிர நரம்பிற் ருதியாழ் ஆகும்
> ஏனை உறுப்பும் ஒப்பன கொளலே
> பத்தர் அளவும் கோட்டின தளவும்
> ஒத்த வென்ப இருமூன் றிரட்டி
> வணர்சாண் ஒழித்தென வைத்தனர் புலவர்.'

என்றபடி, ஆயிரம் நரம்புகளை யுடைய ஆதி யாழ் முதல் ஒரே நரம்பை யுடைய வில் யாழ் வரை பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் பலவகை யாழ்க் கருவிகள் வழக்கத்தில் இருந்தன. இப்பலவகை யாழ்க் கருவிகளிலும் சிறப்பாக எல்லோராலும் கையாளப்பட்டு வந்தன நான்கு விதமான கருவிகளாகும். அவையாவன :—(1) பேரி யாழ்-21 நரம்பு (2) மகர யாழ்-19 நரம்பு (3) சகோட யாழ்-14 நரம்பு (4) செங்கோட்டி யாழ்—7-நரம்பு என்பனவாம்.

பேரியாழ் என்பது 21 நரம்புகளைக் கொண்டதாய் இருந்ததால் அதற்குத் தக உறுப்புக்கள் எல்லாம் உருவத்தில் பருமன் உடையதாய் இருக்குமே யொழிய, உறுப்புக்களின் எண்ணிக்கையில் ஏற்றத் தாழ்வு இல்லை. 7 நரம்புகளை யுடைய செங்கோட்டி யாழை விட இசை மூன்று பங்கு வீறு முடையதாய் இருக்கும்.

மகர யாழ் என்பது சுரு மீன் போன்ற உருவத்தை உடையது. சுரு மீனுக்கு முகத்தில் நீண்ட 'அரம்' போன்ற கோடு உண்டு. சுருவின் முகம யாழின் பத்தல் போன்றே இருக்கும். 19 நரம்புகளை உடையது. நெய்தல் நிலத்தில் வழங்கப்படும் யாழ்.

சகோட யாழ் என்பது, யாழ் உறுப்புக்கள் 18இல் 17 உறுப்புக்களை மாத்திரம் கொண்டது. கோட்டின் நுனியில் உள்ள வணர் (வளைவு) என்ற உறுப்பு மாத்திரம் இந்த யாழுக்கு இல்லை. இதனைத் தெரிவிக்கவே சகோட யாழ் என்ற பெயரை இட்டார்கள் ஆன்றோர்கள்.

ச + கோடு + யாழ்—சகோட யாழ்.

சமமான கோட்டை யுடைய யாழ்; அதாவது, வளைவு இல்லாத நேர் கோட்டை (தண்டை) உடைய யாழ் என்பது. இசை செங்கோட்டி யாழை விட இரண்டு பங்கு வீறு உடையதாய் இருக்கும். இந்த யாழுக்கு 14 நரம்புகள் உண்டு. சகோடு என்பது வடமொழி என்று கூறுவோர் கூறும் வேர்ப் பொருள் பொருந்துமாறில்லை.

செங்கோட்டி யாழ் :—7 நரம்புகளை உடைய யாழ், செம் = சிவந்த ; கோடு = தண்டு ; சிவந்த நிறமான தண்டையுடைய யாழ் என்பது பொருள். தண்டு கருத்த நிறமுடையதா யிருந்தால் கருங் கோட்டி யாழ் என்று பெயர். நிற பேதமே யொழிய உறுப்புக்களிலாவது, நரம்புகளிலாவது வேற்றுமை இல்லை.

* தமிழ் அறிஞர் கழக வெளியீடு 5-ல், 'செங் கோட்டி யாழே இப்போதுள்ள வீணை. நரம்புக் கருவிகட் கெல்லாம் யாழ் என்பது பொதுப் பெயர். வீணை என்பது பிற் காலத்தது. பழமலை, மறைக் காடு முதலிய தமிழகத்து ஊர்ப் பெயர்கட்குப் பதிலாக விருத்தாசலம், வேதாரணியம் முதலிய வடமொழிப் பெயர்களை வழங்குவது போன்றதே. யாழ் என்னும் தமிழ்ச் சொல்லுக்குப் பதிலாக வீணை என்னும் வடசொல்லை வழங்குவது.' என்று கூறப்பட்டுள்ளது.

இச் சிறு வெளியீட்டு ஆசிரியர் செங்கோட்டி யாழ் தான் வீணை என்பதை ஒப்புக்கொள்ளுகிறார். ஆனால், வீணை என்பது வடசொல் என்கிறார். வடமொழியில் அதற்கு வேர் (root) இன்ன தென்றும், அதன் பொருள் இன்ன தென்றும் கூறினார் இல்லை. வடமொழி நிகண்டாகிய 'அமரம்' என்னும் புத்தகத்திற் கூட அச் சொல் இல்லை யென்பது அதனைப் படித்தவர் கூறுகின்றார்கள். ஆதலின், ஆதார மின்றிக் கூறும கூற்றை விடுக்க. நக்கத்திரம் (நகு + அம + திரம்) என்ற தமிழ்ச் சொல்லே வடமொழியில் நக்ஷத்திரம என்று வழங்கப்படுகிறது என்று கூறிய அவரே, வீணை வடசொல் என்பாரானால், தன்னை மறந்த நிலையில் அவர் கூறி யிருக்க வேண்டும். தவறுதல் யாருக்கும் உண்டு, 'யானைக்கும் அடி சறுக்கும்' என்பது பழமொழி.

* தமிழ் அறிஞர் கழக வெளியீடு 5. பக்கம். 3ம், 4ம்.

ஆரியர் (வடமொழியாளர்) இந்தியாவுக்கு வரு முன்னமே **வீணை** என்ற சொல் தமிழ் நாட்டில் வழங்கிவந்த தென்றால், **வீணை** என்பது வடசொல் எப்படி ஆகும்?

இறுதிக் காலத்தில் உலகங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு, இறைவன் மாத்திரம தனித்து இருக்கும் போது '**எம் இறை நல்வீணை வாசிக்குமே**' என்று அப்பர் சுவாமிகள் கூறுகிறார். அவர் **நல்வீணை** என்று கூறுகிறாரே ஒழிய **நல்லியாழ்** என்று கூறவில்லை. தற்காலம் நடைபெறுகின்ற படைப்புக்கு முன்னேயே **வீணை** என்ற பெயரை உடைய கருவி இறைவன் கையில் இருந்த தென்றால், அவ் **வீணை** என்ற சொல் பழமையானது என்று ஏற்படவில்லையா? சில்லாண்டுகளுக்கு முன் காக்கேசியா மலைப் பகுதிகளிலிருந்து இந்தியாவுக்கு வந்த ஆரியருக்குப் பின்தான் **வீணை** என்ற சொல் தமிழ் நாட்டில் வழக்குக்கு வந்த தென்றால் அது பொருந்துமா?

தென்னாட்டில் உள்ள பழமையான சில கோயில்களின் தூபிகளில் (கோபுரம் அல்ல) தென் புறமாக **வீணையைக்** கையில் உடைய தென் முகக்கடவுள் உருவங்கள் (வீணா தக்கணாமூர்த்தி) அமைந்திருப்பதை இன்றைக்கும் பார்க்கலாம. இந்த உருவங்கள் எல்லாம் ஆரிய மொழியின் வாடை தென்னாட்டில் வீசுவதற்கு முன்னேயே அமைக்கப்பட்டவை.

* தமிழ் இசை மலர் 5இல் கூறப்படுவதாவது:—

'இந்தியாவில் (ஆரியருடைய) வேத காலத்துக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரீகத்தை உணர்த்தும் புதை பொருள்களில் வெண்கலத்தாற் செய்யப்பட்ட நடன மாதின் வடிவம் ஒன்று கிடைத்துள்ளது. சில கற் சிலைகள் நடன முறையிற் காணப்படுகின்றன. தவுலைக் கழுத்தில் மாட்டித் தொங்கவிட்ட மனித உருவம் (களி மண்ணால் செய்யப்பட்டது) கிடைத்துள்ளது. மிருதங்கம், வீணை, தாளம், இவற்றைக் குறிக்கும் ஓவியங்கள் அகப்பட்டுள்ளன. இவற்றைச் சேர்த்து நோக்கும போது, சிந்து வெளி மக்கள் நடனக் கலையில் அறிவுடையவராக இருந்தனர் என்பது வெளியாகிற தன்றோ?' என்பது.

ஆதலின், ஆரியர் இந்தியா வரு முன்னேயே **வீணை** என்ற சொல் தமிழ் மொழியில் உண்டு என்பது சிந்துவெளி புதை பொருள் ஆராய்ச்சியால் வெளியாகிறது.

தென்னாட்டுக் கோயில்கள் எல்லாம் தமிழ் ஆகமங்களின் படி கட்டப்பட்டவை. ஆகமங்களில் **வீணை** என்ற பெயரும் தமிழ்ப் பண்களின் பெயர்களும் கூறப்பட்டுள்ளன. 'வேதமோ

* தமிழ் இசை மலர் 5, பக்கம் 34ல் மா. இராசமாணிக்கம் M. O. L; L. T.,

டாகமம் மெய்யாம் இறைவ னூல்.' இறைவ னூலாகிய வேதம்-ஆகமம் தமிழ் மொழியிலேயே தான் இருந்தன. அத் தமிழ் வேதாகமங்களைத் தான் ஸ்ரீகண்ட பரமசிவம் நந்தி யெம்பெருமானுக்குச் சொல்ல, நந்தி யெம்பெருமான் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர், சிவயோகமாமுனி, பதஞ்சலி, வியாக்கிரமர், சுந்தரநாதர் என்ற திருமூலர் ஆகிய எட்டுப் பேருக்கும் உபதேசித்ததாக நம்பியாண்டார் நம்பிகள் [1]'முழுத் தமிழின்படி மன்னும் வேதத்தின் சொற்படியே' என்று கூறுகிறார். கிரந்த லிபியில் இருக்கும் ஆகமங்கள் பின்னால் தமிழிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவை என்று இதனால் ஏற்படுகிறது.

ஆதலின், வீணை என்பது பழந் தமிழ்ச் சொல். விண் என்னும் [2]பகுதி அடியாகப் பிறந்தது. விண் ஒலிப்பது என்னும் பொருளது.

விண் விண் என்று ஒற்றுக்குத் தக ஒலித்துப் பண்ணை இசைப்பது வீணை. விண் விண் எனல் இசைக் குறிப்பு ஈரடுக்கு மொழி (யாழ்ப்பாண சதுரகராதி, பக்கம் 643)

தலைவலி வந்தவன் ஒருவன் தலையின் இரு பக்கத்திலும் உள்ள நரம்புகள் விண் விண் என அடித்துக்கொண்டு இருக்கின்றன என்று கூறுவது உலக வழக்கு.

ஒருவன் கல்லை வீசி எறிவான் ஆனால், அது விண் எனப் பறந்து சென்றது என்று கூறுவது பாமர மக்களிடை நாம் காண்கின்றோம். ஆதலால், வீணை என்னும் சொல் தமிழ்ச் சொல்லே என்றும், அது இலக்கியத்திலும், அகராதியிலும், உலக வழக்கிலும் உண்டு என்பதுங் கண்டாம்.

(d) வடநாட்டு யாழ் வகைகள்[3]

இனி, வடநாட்டு யாழ் வகைகளைப் பற்றிச் சிறிது கூறுவாம். இசைவாணர்களும் இசைப் புலவர்களும் எல்லா யாழ் வகைகளையும் ஒன்று படுத்திப் பேசுவதால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. அச் சிக்கல்களைப் போக்குவதற்கே பிரித்துக் காட்ட வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது.

(1) நாரதப் பேரியாழ்:—64 அங்குல அகலமும், 80 அங்குல நீளமும், ஆயிரம் நரம்புகளையும் உடையதாய், மூன்று மூலையாகச் செய்யப்பட்ட யாழ்.

---

1 நம்பியாண்டார் நம்பிகள் திருவந்தாதி, 36ம் பாட்டு.

2 விண் என ஒலிக்கும் நரம்பின் ஓசை பற்றி வீணை என்னும் பெயர் உண்டாயிற்று, தமிழ் இந்தியா (by N. S. K) பக்கம் 60

3 கொங்கு மலர் I, பக்கம் 80, 81.

'தலமுத லூழியில் தானவர் தருக்கற
புலமை மகளிர் புரிநரம் பாயிரம்
வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ்' (பெருங்கதை)

என்று நாரதப் பேரியாழைப் பற்றிக் கூறியுள்ளது காண்க. தமிழ் நாட்டுப் பேரியாழுக்கு 21 நரம்புகளே அல்லாமல் ஆயிரம் நரம்புகள் அல்ல. தமிழ் நாட்டில் ஆயிரம் நரம்புகளைக் கொண்டது 'ஆதியாழ்' என்னப்படும். ஆதலின், இங்கு கூறப்பட்ட யாழ் வடநாட்டு நாரதப் பேரியாழ் ஆகும்.

(2) தும்புரு யாழ் :—96 அங்குலம் நீளம், 12 அங்குலம் சுற்றள வுடையதாய் உள் ளமைக்கப்பட்டு, ஒன்பது ஒன்பது (81) நரம்புகளை உடையது.

(3) கீசக யாழ் :—80 அங்குல நீளமும் 100 நரம்புகளையும் உடையது ஆம்.

(4) மருத்துவ யாழ் :—இது முழு மதி போன்று, வட்ட வடிவாய், முயற் றோலினாற் கட்டி, ஒரு நரம்பாகிய கடிப்பு அமைந்துள்ளது.

இந் நால் வகை யாழ்களும் 'வடமொழி விதித்த' என்னும் கல்லாடச் செய்யுளில் கண்டது. இவை ஆரிய நூன் முறைப்படி அமைந்தனவாம். திருமயம் முதலிய கோயில்களில் காணப் படுகிற ஓவியங்கள்—சிற்பங்கள் எல்லாம் இங்கு கூறப்பட்ட ஆரிய நாட்டு யாழ் வகைகளும், யவன நாட்டு யாழ் வகைகளுமே ஆகும் என்பது கண்கூடு. இவைகளிற் சில வில் போல் வளைந்த தண்டுகளை உடையன. தமிழ் நாட்டு யாழ் வகைகளுக்குத் தண்டு கள் வளைந்து இல்லை என்பதனை முன்னமே விளக்கினும்.

(e) சாரீர வீணை

தமிழ் நாட்டில் வழங்கும் இசைக் கருவிகள் ஐந்து வகைப் படும். அவையாவன :—(1) தோற் கருவி (2) துளைக் கருவி (3) கஞ்சக் கருவி (4) நரப்புக் கருவி (5) மிடற்றுக் கருவி என்பன.

மிடற்றுக் கருவிக்குத் தான் சாரீர வீணை என்று பெயர். (கொங்கு மலர் I, பக்கம் 106). 'மனித உடம்பு சில வகை களில் யாழ் போன்று அமைந்திருத்தலானும், அவ் வுடம்பினுள் வாழும் உயிரின் முயற்சியால் மூலாதாரத்து அமைந்த வாயு மேல் எழுந்து, எழுத்தின் நாதமாய்த் தோன்றி, நெஞ்சும், மிடறும், நாக்கும், மூக்கும், அண்ணமும், உதடும், பல்லும், தலையும் ஆகிய பெருந் தானங்கள் எட்டினும், எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு எனப்படும் எட்டு வகைக் கிரியைகளும் செய்யப்பட்டு வரும் மிடற்றுப் பாடலாகி இவ் வுடலாகிய வீணையின் நின்றே எழுவதாலும் உடலைச் சாரீர வீணை என்று கூறுவர்.' என்பது.

உடம்புக்கே வீணை என்ற பெயர் தமிழ் நாட்டில் வழக்கில் இருக்கும் போது, வீணை என்ற சொல் வட சொல் என்று கூறு பவர், மனித உடம்பும் வடவர் வந்த பின்தான் உண்டாயிற்று என்று கூற முன்வருவார்களோ.? ஆகையால், முன் பின் நிதா னிக்காமல் அவசரப்பட்டு வீணை வடசொல் என்று சொல்லக் கூடாது. அதற்குரிய ஆதாரங்களைத் தேடி வைத்துக் கொண்டு பின் கூற வேண்டும். ஆதாரங்களையும் உடன் கூறவேண்டும்.

உடம்பாகிய வீணையைப் பற்றிக் கூறும்போது, உடம்பின் அமைப்பைப் பற்றிப் பல அரிய செய்திகள் 'இசை நுணுக்கம்' என்னும் நூலில் கூறி இருப்பதாகச், சிலப்பதிகார உரையாசிரி யர் கூறுகிறார்.

ஆதலின், இசை நுணுக்க ஆசிரியருக்கும், சிலப்பதிகார உரையாசிரியர்க்கும் உடமபுக்கு வீணை என்று பெயர் உண்டு என்பது அவர்கள் ஒப்பினது எனத் தெரிகிறது.

உடம்பில் உள்ள முது கெலும்புக்கு வீணைத் தண்டு என்று பெயர். அந்தப் பெயரையே சூட்டி,

> 'கோணு மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
> வீணைத் தண்டூடே வெளியுறத் தானேக்கி!'

என்று உடமபைக் கொண்டு யோகம் செய்தலைக் குறித்துள்ளார். பொறை நிலை அடைந்து சித்தத்தை ஒருவழிப் படுத்தி, வீணை யாகிய தண்டின் அடிப் பக்கத்தில் உள்ள துளை வழி நினைவைச் செலுத்த வல்லார்க்கு, பத்து விதமான இசைகள் (நாதங்கள்) கேட்கும் என்று கூறுகிறார். அவையாவன :—

> 'மணி,[1] கடல்,[2] யானை,[3] வார்குழல்,[4] மேகம்[5]
> அணிவண்டு,[6] தும்பி,[7] வளை,[8] பேரிகை,[9] யாழ்[10]
> தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
> பணிந்தவர்க் கல்லது பார்க்க வொண்ணுதே'

(தமிழ் மூவாயிரம் —586)

என்பதே. இங்கே திருமூலர் வீணை யாகிய முது கெலும்புத் தண்டில் கடைசியாகக கேட்பது யாழ் ஒலி என்கிறார். அவர் வீணை ஒலி என்று கூற வில்லை. என்னெனின், நினைவு ஒரு வழிப் பட்டு யோக நிலையில் இருக்கும் போது கேட்டது யாழ் ஒலியே, மிடற்றுக்கு அங்கு வேலை இல்லை. மிடற்றால் இசைத்துப் பாடும் போதுதான் உடம்பாகிய யாழுக்கு வீணை என்று பெயர் உண்டாகிற தென்பதைக் குறிப்பால், தமிழ்ச் சொற்களைப் பயன் படுத்தும் மரபால், தெரிவிக்கிறார். யாழை இசைத்து, மிடற்றால் யாழை ஒட்டிப் பாடும் போதுதான், 'எம்மிறை நல்வீணை வாசிக்கும் மே' என்கிறார் அப்பர். மிடறு சேரா விட்டால் கருவியினின்றும் கேட்பது யாழ் ஒலியே யாகும். ஆதலின், ஆன்றோர்கள் மரபு கெடாமல் சொற்களை வழங்கி யுள்ளார்கள் என்பது தெளிவு. (தொடரும்.)

பரத சாத்திரம்.

இரண்டாவது

இராகவியல்[1]

கீதம் வாத்திய நிருத்தமிம் மூன்றும்
ஓதுப சங்கீ தம்மென நூலோர்.

(இ-ள்) கீதம், வாத்தியம், நிருத்த மென்னும் மூன்றுங் கூடியது சங்கீத மாமென்பர்—எ-று.[2] (க)

ஆத்மா மனமோ டக்கினி வாயுவின்
சேர்த்த முயற்சியிற் செனிக்குமேழ் சுரமே.

(இ-ள்) ஆத்மா, மனது, அக்கினி, வாயுவுமாகிய நான்கின் முயற்சியால் ஏழு சுரங்களுந் தோன்றும்[3] —எ-று. (உ)

---

1. இசையின் இலக்கணத்தை விரித்துரைப்பது இவ்வியலாதலின் இப்பெயர்த்தாயிற்று.

2. மிடற்றுப் பாடலும் கருவியின் ஒலியும் ஆடலுக் குரிய தாளமும் ஆகிய மூன்றும் பிழையாது ஒத்து இயங்குவதே சங்கீதம் எனப்படும்.

3. உயிரினது முயற்சியால் மனம் தூண்ட, அத் தூண்டுதலால் உதராக்கினி கிளர்ந்தெழ உதானன் என்னும் வாயு எழிசையைத் தோற்றுவித்தலால் இவ்வேழு சுரங்களின் பிறப்பிற்கு உயிர், மனம், உதராக்கினி, உதானனென்னுங் காற்று என இந்நான்கின் முயற்சியும் வேண்டப்படும் என்பதாம்.

அணுக்கூட்ட மான நாதமே னோக்கி
அணுகு நாபி யுரங்கள முச்சியைப்
பொருந்திநாப் பல்லித ழணத்தின் ஞெழிலால்
பிறக்கு மென்றே பேசினர் குறுமுனி.[1]

(இ-ள்) நாதமாகிய அணுக் கூட்டம் மேனோக்கி யெழுந்து நாபி, மார்பு, கண்டம், உச்சி யென்னு மிடங்களிற் பொருந்தி நா, பல், உதடு, மேல்வாய் என்னும் நான்கின் ஞெழிலாற் பிறக்கு மென்று குறுமுனி கூறினர் —எ-று. (௯)

நாதம் என்ன நவில்மூன் றெழுத்தும்
ஓது பிராணன் அங்கிகால் என்ப.

(இ-ள்) நாதம் என்னும் மூன்று அக்கரங்களும் முறையே பிராணன், அக்கினி, வாயு வென்பர் நூலோர் —எ-று. (௰)[2]

அகார வுகார மகாரமூன் றெழுத்தும்
ரஜோகுண பிரமனுஞ் சற்குண மாயனும்
தமோகுண ருத்ர னு மாமெனச் சாற்றுவர்.

(இ-ள்) அகார, உகார, மகாரம் என்னும் மூன்று பீஜாக்ஷரங்களும் முறையே ரஜோகுணப் பிர்ம்மாவும்,

---

1. 'நிறையுயிர் முயற்சியின் உள்வளி துரப்ப
எழுமணுத்திரள் உரங் கண்டம் உச்சி
மூக் குற்றிதழ்நாப் பல்லணத் தொழிலின்
வெவ்வே றெழுத்தொலியாய் வரல் பிறப்பே'
என நன்னூலார் கூறிய எழுத்தின் பிறப்பு இசைப் பிறப்புக்கும் ஏற்புடையதாகும்.

2. இவ்வியலில் ௰ முதல் ௧௧ வரையுள்ள சூத்திரங்களால் தத்துவ முறைகளைப் பின்பற்றி ஏழிசைக்குந் தோற்றங் கூறுகின்றார்.

௰. நாதம் என்ற சொல்லில் 'நா' என்னும் எழுத்து பிராணனையும் 'த' என்னு மெழுத்து அக்கினியையும் 'ம்' என்பது வாயுவினையும் குறிப்பன என்பது ஆசிரியர் கருத்து.

சாத்விககுண மாயனும் தாமதகுண உருத்திரனு மாமென்பர்—எ-று. (ரு)

அவற்றுள்,
அகாரமே வாம நாசியா மிடகலை
சந்திர ஞாள மாமெனச் சாற்றுவர்.

(இ-ள்) மேற் கூறிய மூன்றக் காரங்களுள், அகாரமே வாம நாசிகாபுட இடகலை சந்திர ஞாள மெனபர்—எ-று. (சா)

உகாரமே தக்கண நாசியாம் பிங்கலை
உதயன் ஞாள மாமென வோதுப.

(இ-ள்) உகாரமே தக்ஷண நாசிகாபுட பிங்கலை சூரிய ஞாள மாமென்பர்—எ-று. (எ)

மகாரமே மத்திமை சுழுமுனை யக்கினி
மன்னிய ஞாள மாமெனக் கூறுப

(இ-ள்) மகாரமே சுஷுமுனை அக்கினி ஞாள மென்பர்—எ-று (அ)

ரு. அ, உ, ம என்னும் இம் மூன்றும் எல்லா மந்திரங்களுக்கும் மூலமான வித்தெழுத்துக்களாம். இவற்றுள் 'அ' இராஜத குணமுடைய பிரமனையும், 'உ' சாத்துவிக குணமுடைய திருமாலையும், மகாரமெய் தாமத குணமுடைய உருத்திரனையும் குறிக்குமென்பது கருத்து.

சா, எ, அ. அகாரம் இடகலை, உகாரம், பிங்கலை, மகாரம் சுழுமுனை எனக் கொள்க. வாம நாசி—இடது மூக்கு. சந்திர ஞாளம்—சந்திரகலை. தக்கண நாசி—வலது மூக்கு. உதயன் ஞாளம்—சூரிய கலை. அக்கினி ஞாளம்—சுழுமுனை.

இம்மூன் றக்கரங் களுமியைந் ததுவே
சகல மந்திர தேவதா சாரமாம்
ஓமெனு மக்கர மாமென வுரைப்பர்.

(இ-ள்) இந்த மூன்றக் கரங்களுங் கூடியதே சகல மந்திர தேவதாசார மாகிய ஓங்கார மாமென்பர் —எ-று. (கூ)

ஓங்காரத் திருந்தே யுயர்சுர நிர்த்தொனி
நிர்ணயத் தொனிவே ணுத்தொனி காளத்
தொனிசங் கத்தொனி முகிற்றொனி மூரசத்
தொனிமுழ வத்தொனி குமந்தத் தொனியென்
றீரைந் தாகு மியைந்திடு தொனியே.

(இ-ள்) ஓங்காரத்திலிருந்து சுரத்தொனி, நிர்க் கோஷத் தொனி, நிர்ணயத்தொனி, வேணுத்தொனி, காளத்தொனி, சங்கத்தொனி, மேகத்தொனி, பேரித் தொனி, மத்தளத் தொனி, குமந்தத்தொனி யென்னும் பத்து வித தொனிகளுந் தோன்றின—எ-று. (க0)

சுருதியி னுருவா நான்குபண் மூன்றிசை
எழ்சுர மென்றே யியம்பினர் குறுமுனி.

(இ—ள்) வேத ரூபமாகிய நான்கு பண், மூன்றிசை எழு சுரம் என்று குறுமுனிவர் கூறினர்—எ-று. (கக)

பாலை குறிஞ்சி மருதஞ் செவ்வழி
எனு நான்கே பண்ணென விசைப்பர்.

(இ-ள்) பாலைப்பண், குறிஞ்சிப்பண், மருதப்பண், செவ்வழிப்பண் ணெனப் பண் ணான்கா மென்பர் —எ—று. (கஉ)

கூ. அ, உ, ம் என்னும் மூன்றெழுத்துக்களும் இயைந்தே ஓம் என்னும் பிரணவம் தோற்று மென்பர்.

க0. இப் பத்து வகை ஒலியின் இயல்பு ஆராய்தற்கு ரியதாம்

கக. 'பாலை குறிஞ்சி மருதஞ்செவ் வழியென
நால் வகை யாழாம் நாற் பெரும் பண்ணே'
(பிங்கலம் 1375)

மந்தர மத்திமந் தாரமூன் றிசையே

(இ-ள்) மந்தரவிசை, மத்திமவிசை, தாரவிசை யென இசை மூன்றும்—எ-று. (கங)

உரங்கள சூர்த்தினி யுதித்திடு மிடனே
இடகலை பிங்கலை சுஷுமுனை யென்ப.

(இ-ள்) மேற் கூறிய விசைகள் மார்பு, கண்டம், சிரத்திற் றோன்றும். முறையே இடகலை பிங்கலை சுஷு முனை நாடி யென்பர்—எ-று. (கச)

குரலே துத்தங் கைக்கிளை யுழையிளி
யிரமிகு விளரி தாரமா முறையே
சரிகம பதநி யிவற்றினக் கரமாம்.

(இ-ள்) குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனச் சுரம் ஏழாம். முறையே ச, ரி, க, ம,

---

கங. மந்தரம்—மெலிவு. மத்திமம்—சமன். தாரம்—வலிவு. இவை மூன்றும் மூவகை யியக்கம் எனப்படும்.

'வலிவும் மெலிவும் சமனு மெல்லாம்
பொலியக் கோத்த புலமையோன்' (சிலப், அரங்கேற்று) எனவும், 'மூவகை யியக்கமும் முறையுளிக் கழிப்பி' (வேனிற் காதை) எனவும், 'வரன்முறை வந்த மூவகைத் தானத்துப் பாய் கலைப் பாவை பாடற்பாணி' (புறஞ்சேரி யிறுத்த) எனவும் வருந் தொடர்களால் இளங்கோவடிகள் இம் மூவகை யிசையினையும் 'மெலிவு சமன் வலிவு' என்றும், மூவகை யியக்கம்' என்றும் 'மூவகைத் தானம்' என்றும் குறிப்பிட்டு விளக்கினமை காண்க.

கச. மெலிவு, சமன், வலிவு என்னும் மூவகை யியக்கமும் முறையே மார்பு, மிடறு, தலை என்னும் மூன்றிடங்களிலும் தோன்று மெனவும் அவை முறையே இடகலை, பிங்கலை, சுழு முனையென்னும் நாடிகளைச் சார்ந்து தோன்றுமெனவும் கொள்க.

கரு. சிலப்பதிகாரம் முதலிய பழந்தமிழ் நூல்களில் குரல் முதலாக எண்ணப்பட்ட ஏழிசைகளும் முறையே சட்சம் முத

ப, த, நி, யென்னும் எழுக்கரங்களும் இவற்றின் குறியாம்—எ-று. (கரு)

லாக இக்காலத்தில் வழங்கும் முறையிலமைந்தனவே என்பது இந் நூலாசிரியர் கருத்து. இவருக்குப்பின் வந்தோர் பலரும் இங்ஙனமே கூறி வந்துள்ளார்கள். இக்கொள்கை தவறுடைத் தென்பது அருண்மிகு விபுலாநந்த அடிகளார் ஆராய்ந் தியற்றிய யாழ் நூலில் நன்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

அரங்கேற்று காதை யுரையினுள்ளே அரும்பதவுரை யாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் எடுத்தாளுகின்ற பாலை (சுரவரிசை) சட்சம் முதல் நிஷாத மீறாகக் கீழிருந்து மேல் நோக்கிச் செல்லும் மத்திமக் கிராமத்தின் எதிர் நிரனிறைக்குரிய தென்பது யாழ் நூல் பாலைத் திரிபியலில் ஐயந்திரிபறக் காட்டப்பட்டது. இளங்கோவடிகள் காலத்தில் செம்முறைக் கேள்வி யென்னும் பெயருடைய சகோட யாழில் நிஷாதம் முதல் தைவதம் ஈறாகப் பதினாலு நரம்புகள் கட்டப்பட்டிருந்தன. அவற்றுள் முதலிலுள்ள நி ச ரி க என்னும் நாலும் மந்தரஸ் தாயியிலும் (மெலிவுத் தானத்திலும்) ம ப த நி ச ரி க என்னும் ஏழும் மத்திமஸ்தாயியிலும் (சமன்தானத்திலும்) ம ப த என்னும் மூன்றும் தாரஸ் தாயியிலும் (வலிவுத் தானத்திலும்) முறையாக அமைந்திருந்தன. சட்சக் கிராமத்திலே சட்சம் முதலாகவும், காந்தாரக் கிராமத்திலே காந்தாரம் முதலாகவும் மத்திமக் கிராமத்திலே மத்திமம் முதலாகவும் வைக்கப்படும். சிலப்பதிகாரத்திற் குரல் முதலாகச் சொல்லப்பட்ட வரிசை மத்திமக் கிராமத்துக்கு உரியதாகும். குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் எழிசையும் இக் காலத்தில் மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம், ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம் என்ற பெயர்களால் முறையே வழங்குவனவாம். ம ப த நி ச ரி க என நின்ற முறையிற் குரல் முதலாக நின்ற எழிசைகளுக்கும் கூறிய இயல்புகளைச் ச ரி க ம ப த நி என்ற முறையில் அமைந்த ஷட்ஜம் முதலிய எழிசைக்கும் கூறிய இலக்கணங்களுடன் ஒத்து நோக்குங்கால் அவை முரண்படுதல் காணலாம். 'பட்டடை—நரம்புகளில் இளிக்குப் பெயர்; என்னை? எல்லாப் பண்ணிற்கும் அடிமணையாதலின்' என அடியார்க்கு நல்லார் கூறுதலால் எழிசைகளையும் இளி முதலாக உழை யீறாக எண்ணுதலே பண்டை யிசையாசிரியர் மரபென்பது நன்கு விளங்கும். இளி யென்னும் ஓசை ஏனையோசைகளுக் கெல்லாம் அடிமணையாகும் என்பதனை யறிவுறுத்த அதனை 'வண்ணப் பட்டடை' என்ற பெயரால் இளங்கோவடிகள் குறித்துள்ளார். இக் காலத்தில் ஷட்ஜம் என வழங்கும் ஓசை ஏனைய ஆறும் பிறத்தற்கு இடமானது என்ற பொருளி

பரசிவ வீச்சுர சத்தியோ சாத
வாமா கோரதற் புருஷவீ சான
வாமே ழிடத்தினு முறையே மருவும்.

(இ-ள்) பரம், சிவம், ஈச்சுரனுடைய சத்தியோ சாத, வாம, அகோர, தற்புருஷ, ஈசான மென்னும் ஏழிடங்களில் முறையே தோன்றும்—எ-று. (கசு)

கந்தா மூர்த்தினி கவின்பெறு நாசி
அந்தமா மோஷ்டக முரமுக நாவென்
றறைந்தனர் சாத்திற் காம்பிறப் பிடமே.

(இ-ள்) கண்டம், சிரசு, மூக்கு, உதடு, மார்பு முகம், நா வென்னும் ஏழிடங்களிலும் சுரங்கள் முறையே பிறக்கு மென்பர்—எ-று. (கஎ)

லேயே ஷட்ஜம் என்ற காரணப் பெயரைப் பெற்ற தென்பர். (ஷட்—ஆறு. ஷட்ஜம்—ஆறும் பிறத்தற்கு இடனுயது) ஆகவே பண்டையோர் வழங்கிய இளியும் இக் காலத்து வழங்கும் ஷட்ஜமும் ஒன்றே யாம் என்பது விளங்கும். பண்டையோர் விளரி யென வழங்கிய இசைக்கும் இக் காலத்தார் ரிஷபம் என வழங்கும் இசைக்கும் பசுவின் ஒலியை முன் னூல்கள் உவமை யாகக் கூறுதலால் விளரியும் ரிஷபமும் ஒன்றே யென்பது புலனும். பண்டைத் தாரமும் இக்காலத்துக் காந்தாரமும் ஆட்டின் ஒலியைத் தமக்குரிய ஓசையாகக் கொண்டன என்ப வாதலின் இவை யிரண்டும் ஒன்றே யென்பது புலனும்.

இவ்வாறே கைக்கிளையும் தைவதமும் குதிரையி னெலியைத் தமக்குரிய ஓசையாகக் கொண்டன வாதலின் அவை யிரண்டும் ஒன்றேயாம். உழையும் நிஷாதமும் யானையின் ஒலியைத் தமக் குரிய ஓசையாகக் கொண்டன என நூல்கள் கூறுதலால் அவ் விரண்டும் ஒன்றே யென்பது தெளியப்படும். இவை இங்ஙன மாகவே எஞ்சி நின்ற குரல் மத்திமமாகவும் துத்தம் பஞ்சமமாக வும் கொள்ளற் குரியன என்பது நன்கு புலனும், இவ்வாறு கொள்ளுதற்குரிய வேறு சில நியாயங்கள் யாழ் நூலில் அலகு சுருதிக் கணக்குக் கூறுமிடத்து விபுலாநந்த அடிகளாரால் நன்கு விளக்கப்பட்டுள்ளன. இவற்றின் விரிவை ஆண்டுக் காண்க.

கசு. ஏழிசைகளின் தோற்றத்திற்கு இறைவனெடு தொடர்பு கூறப்பட்டது.

கஎ. எழு சுரங்களும் பிறத்தற்கு நிலைக் களன்கள் கூறப் பட்டன. கந்தரம்—மிடறு. மூர்த்தினி—தலை. ஓஷ்டகம்—உதடு. உரம்—மார்பு.

உதய மத்தியான்ன மோதப ரான்னம்
சாயான்னம் பூருவ நிசிநடு ராத்ரிபின்
ராத்ரி யென்றே நவிற்றுவர் காலம்.

(இ-ள்) உதயம், மத்தியான்னம், அபாரான்னம், சாயான்னம், பூருவராத்திரி, நடுராத்திரி, பின்ராத்திரி யென்னுங் காலங்களே சுர உற்பத்தி காலங்களா மென்பர்—எ-று. (கஅ)

குலமஞ்ஞையே றூடு குரண்டங் கோகிலம்
வலமுறு மிவுளி மதகய மாமொலி.

(இ-ள்) மயில், ரிஷபம், ஆடு, கொக்கு, குயில், சாதிஅசுவம், யானை யென்னு மேழும் சுரத்தொனி யுவமைகளாம்—எ-று. (கக)

மௌவன் முல்லை நீபநல் வஞ்சி
நெய்தல் பொன்னுவிரை நீள்புன்னை யேழும்
சுரத்தின் மணமெனச் சொற்றனர் புலவர்.

(இ-ள்) வனமல்லிகை, முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், பொன்னுவிரை, புன்னை யென்னு மேழு மலரும் சுர வாசனை யுவமைகளா மென்பர்—எ-று. (உ0)

கஅ. உதயம்—விடியற்காலை, அன்னம்—பகல்; அஹஸ் என்னும் வடசொல்லின் திரிபு. மத்தியான்னம்—நண்பகல் அபாரான்னம்—பிற்பகல், சாயான்னம்—மாலைப்பொழுது. பூருவ நிசி—முதல் யாமம். நடுராத்ரி—நள்ளிரவு. பின்ராத்ரி—கடைசி யாமம்.

கக. ஷட்ஜம்—மயில் ஓசை. ரிஷபம்—எருதின் ஒலியை யும், காந்தாரம்—ஆட்டின் ஒலியையும். மத்திமம்—கொக்கின் சத்தத்தையும். பஞ்சமம்—குயிலோசையையும். தைவதம்-குதிரை யின் ஓசையையும். நிஷாதம்—யானையின் ஓசையையும் ஒத் தொலிப்பன என்பது கருத்து.

உ0. சட்சம் வனமல்லிகையின் மணமும், ரிஷபம் முல்லை யின் மணமும் காந்தாரம் கடம்பின் மணமும் மத்திமம் வஞ்சியின் மணமும் பஞ்சமம் நெய்தலின் மணமும் தைவதம் பொன்னுவிரை யின் மணமும் நிஷாதம் புன்னையின் மணமும் போன்று மணங் கமழும் என்பது கருத்து.

பால்தேன் கண்டுநெய் பகர்ந்திடு மேலம்
ஏலு மரம்பை மாதுளையின் சுவை.

(இ-ள்) பால், தேன், கற்கண்டு, நெய், ஏலம், வாழைப்பழம் மாதுளம்பழம் என்னும் ஏழும் முறையே சுரத்தின் சுவை யுவமைகளாம்—எ—று. (உக)

சுரநாமக் குறி.

சரிகம பதநி யென்னச் சாற்றுமே ழெழுத்தினுக்கும்
வரிசையாச் சட்சமங்கல் லிடபங்கார் தாரத் தோடே
உரியமத் திமமிசைக்கும் பஞ்சமந் தெய்வதம் பின்
அரியதோர் நிஷாதமென்ன வறைந்தன ரவற்றி னுமம்.

(இ-ள்) ச, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழக்கரங்களுக்கும் முறையே சட்சம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தெய்வதம், நிஷாதம் என்ன அவ்வவ்வக் கரங்களையே முதலாகக்கொண்டு பெயர் கூறினர்—எ-று. (உஉ)

அந்தர ககுளமோ டறைவரோன் பானென.

(இ-ள்) சிலர் அந்தர மென்றும் ககுள மென்றும் அந்தர சுரங்க ளிரண்டுங் கூட்டி ஒன்பது சுரங்களுள வென்பர்—எ-று. (உ௩)

தசவித கமகம்.[1]

ஆரோ ஹணத்தோ டவரோஹணம் டாலு
சோன வாந்தோளம் சேர்புரிதம்—ஆவாதம்
மூர்ச்சனை மூவுச்ச முதிர்பிரத்தி யாஹதமும்
சேர்க்கமகங் கம்பிதம்பத்தே.

(இ-ள்) ஆரோஹணம், அவரோஹணம், டாலு, ஆந்தோளம், ஸ்புரிதம, ஆவாதம், மூர்ச்சனை, திரியுச்சம், பிரத்தியாஹதம், கற்பிதம் என்னும் பத்தும் தேசிக கமகங்களாம்—எ-று. (உச)

உக. சட்சம் பாலின் சுவையும் ரிஷபம் தேனின் சுவையும் காந்தாரம் கற்கண்டின் சுவையும் மத்திமம் நெய்யின் சுவையும் பஞ்சமம் ஏலத்தின் சுவையும் தைவதம் வாழைப்பழத்தின் சுவையும் நிஷாதம் மாதுளையின் சுவையும் போன்ற சுவையினை யுடையன என்பது கருத்து.

1. சுரங்களின் அசைவு கமகம் எனப்படும்.

முறையே யிவற்றின் சுரங்கள்.

ஆரோஹணம் [2]	ச ரி க ம ப த நி ச
அவரோஹணம் [3]	ச நி த ப ம க ரி ச
டாலு	ச ப ச ம ச க
ஆந்தோளம் [4]	ச ரி ச பா ப
ஸ்புரிதம் [5]	சச ரிரி கக மம
ஆவாதம்	சரிரி ககமமப சசரிரி கக மம
மூர்ச்சனை [6]	சரிகமபதநி, ரிகமபதநிசரி
திரியுச்சம்	சசச ரிரிரி கக
பிரத்தியாஹதம்	சச நிநி தத பப
கம்பிதம் [7]	பா பப பப

சுவரித பிரமத தீர்க்க கம்பித
திதவுல் லாசித தீர்க்க லோலித
லீலோ தீர்க்க தீர்க்க லீலித
கிருத சூக்ஷ்மித பிரஸ்துத தாக்திக
ஊர்ச்சித வுல்லோ சிதமூல ரசித்
கோமள லலிதோற் சார சிட்டபத
கீர்த்தித வடவி ளைத்திரு பானெடு
சேர்த்த விரண்டுஞ் செப்பிடு கமகமாம்.

(இ-ள்) ஸ்வரிதம், பிரமதம், தீர்க்கம், கம்பிதம், திதம், உல்லாசிதம்,[1] தீர்க்கலோலிதம், லீலோதீர்க்கம், தீர்க்கலீலிதம், கிருதம், சூக்ஷ்மிதம், பிரஸ்துதம், தாக்திகம், ஊர்ச்சிதம், உல்லோசிதம், மூலம், ரசிதம், கோமளம், லலிதோற்சாரம், சிட்டபதம், கீர்த்திதம்,

2. ஆரோஹணம்—ஓசை மேன் மேலுயர்தல். இதனை ஆரோசை என்பர் சேக்கிழார்.

3. அவரோஹணம்—முன் எடுத்த ஒலியிலிருந்து இறங்கிச் செல்லும் ஓசை. இதனை அமரோசை என்பர் சேக்கிழார்,

4. ஆந்தோளம்—ஒரு சுரத்தின் நின்று அதன் மேற் சுரத்தின் சாயையை நன்கு காண்பித்தல்.

5. ஸ்புரிதம்—ஒரு சுரத்தை இரண்டிரண்டாகச் சொல் லும்போது இரண்டாம் சுரத்தை அழுத்திச் சொல்லுதல் என்ப.

6. மூர்ச்சனை—ஒரு இராகத்தின் சம்பூரண சுரத்தைக் காட்டும் நிலை.

7. கம்பிதம்—ஒரு சுரத்திலேயே நின்று அதனை அசைத் தல்.

1. இதனை இக் காலத்தார் சாரு என்று வழங்குப.

அடவி என்னும் இருபத்திரண்டு கமகங்களென்று பிறர் கூறினர். இது பிறநூற் கருத்து—எ-று. (உரு)

ஆயுர் விர்த்தி[2] யாஞ்சௌ பாக்கியம்[3]
மீயுயர் சோபனம்[4] விளங்கிடு சுவண[5]
லாபம் பாப நசித்திடல்[6] யோகம்[7]
காரிய சித்தி[8] யாமெனக் கழறுப.

(இ-ள்) ஆயுர்விர்த்தி, சௌபாக்கியம், சோபனம், சுவர்ணலாபம், பாபக்ஷயம், ஐஸ்வரியம், காரியசித்தி யென்பன முறையே யிவற்றின் பயன்களா மென்பர் —எ-று. (உசு)

சரமொடு சுருதி கமகத்திற் றோன்றிய
வாமிகு ராகம் வான்சுரம் சாதம்
அக்ஷா மதுர மலங்காரத் தொடு
பக்ஷவா லாபன மாகப் பகரும்
ஆறிலக்கணம் வீறுற மென்ப.

(இ-ள்) இச் சுரம், சுருதி கமகங்களிற் றோன்றிய இராகங்கள், சுரம், சாதம், அக்ஷரம், மதுரம், அலங்காரம், ஆலாபனமென ஆறு லக்ஷணங்களையுடையனவா மென்பர்—எ-று. (உஎ)

சுர ஜநந வாரங்கள்

மதிபுதன் குருசேய் மழைக்கோ னிரவி
கதிர்மகன் முறையே கழறினர் வாரம்.

(இ-ள்) திங்கள், புதன், வியாழம், செவ்வாய், வெள்ளி, ஞாயிறு, சனி ஆகிய வேழும் முறையே சுரங்களின ஜநந வாரங்களா மென்பர்—எ-று. (உஅ)

---

2. வாழ்நாள் வளர்ச்சி. 3. ஆகூழ்.
4. மங்களம் 5. சுவணம்—பொன்.
6. பாப நீக்கம். 7. யோகம்—புதுநலம்.
8. மேற் கொண்ட வினை நிறைவு.

உஅ. திங்கட்கிழமையில் சட்சமும், புதனன்று ரிஷபமும், வியாழனன்று காந்தாரமும்; செவ்வாயன்று மத்திமமும், வெள்ளிக்கிழமை பஞ்சமமும், ஞாயிறன்று தைவதமும், சனியன்று நிஷாதமும் பிறந்தன என்பது பௌராணிகர் கொள்கை. சேய்—செவ்வாய்; மழைக்கோன் —சுக்கிரன்; வெள்ளி; இரவி—சூரியன். கதிர்மகன்—சனி.

சுர ஜநந திதிகள்

மூட்டை பன்மூன் றைந்தெட் டேழ்மூன்
றோட்டிய வொன்பா னுமென வுரைப்பர்.

(இ-ள்) அமாவாசியை, திரயோதசி, பஞ்சமி, அஷ்டமி, சத்தமி, திரிதியை, நவமி ஆகிய ஏழும் முறையே சுரங்களின் ஜநந திதிகளா மென்பர் —எ-று. (உகூ)

சுர ஜநந நக்ஷத்திரம் நிறங்கள்

சதயஞ்சித் திரையவிட்டந் தணிமகங் கதிர்நா ணீர்நாள்
துதைபனே தோன்று நாளாஞ் சொல்வெண்மை தோகை கண்டம்
துதிபெறு கனகமுல்லை மலர்பல வர்ண மஞ்சள்
கதியுறு புகையின் வர்ணங் கழறுப முறையினானே.

(இ-ள்) சதயம், சித்திரை, அவிட்டம், மகம், உத்திரம், பூராடம், அனுஷம், என்னு மிவை முறையே ஜநந நாளாம். வெள்ளைநிறம், மயிற்கழுத்துநிறம், பொன்னிறம், முல்லைப்பூநிறம், நாநாவர்ணம். மஞ்சள்நிறம், புகைவர்ணம், முறையே அவைகளின் வர்ணங்களாகு மென்பர் —எ-று. (௩௦)

உகூ. மூட்டை—அமாவாசை. பன்மூன்று—பதின்மூன்று; திரயோதசி. ஐந்து—பஞ்சமி. எட்டு—அஷ்டமி. ஏழ்—சத்தமி. மூன்று—திரிதியை. ஒன்பான்—நவமி.

௩௦.

சுரம்	பிறந்த விண்மீன்	சுரத்தின் நிறம்
சட்சம்	சதயம்	வெள்ளை
ரிஷபம்	சித்திரை	மயிற்கழுத்துநிறம்
காந்தாரம்	அவிட்டம்	பொன்னிறம்
மத்திமம்	மகம்	முல்லைப்பூநிறம்
பஞ்சமம்	உத்திரம்	கலப்புநிறம்
தைவதம்	பூராடம்	மஞ்சள்நிறம்
நிஷாதம்	அனுஷம்	புகைநிறம்

கதிர் நாள்——உத்தரம். நீர் நாள்——பூராடம்.
பனை தோன்று நாள்——அனுஷம்,

மொழியரசி—முதற் பகுதி—தமிழ்ப் புகழ்.

தமிழ் மணி சாமி. வேலாயுதம் பிள்ளை இயற்றிய நம் சங்கப் பதிப்பாகிய, மொழியரசி—முதற் பகுதி—தமிழ்ப் புகழ் யாவராலும் போற்றப்பட்டு பெரும் பயன் அளித்து வருகிற தென்பதைக் கீழே கண்ட சில மதிப்புரைகள் நன்கு விளக்குவன வாகும். நம் பொழிலன்பர்கள் ஒவ்வொருவரும் அதனை வாங்கிப் படித்து மகிழுவதுடன் தம் அன்பர்களையும் அவ்வாறே ஈடுபடுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதனால் இந் நூலின் பின் ஐந்து பகுதிகள் விரைவில் வெளி வந்து தமிழுலகத்தின் தன் மதிப்பைப் பெருக்கப் பேருதவி புரிந்ததாகும் என்பதைக் காணலாம் :—

(மதிப்புரை மாலை—பின் வந்த பொறுக்கு மணிகள்)

1. சித்தாந்தம் (மே,1949) திரு C. M. இராமச்சந்திரன் செட்டியார், B. A., B. L., :—அருமபத, ஆராய்ச்சி உரைகள் இந் நூலை அணி செய்கின்றன. இந் நூல் தமிழ் ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவதாகும்.

2. வானொலி நிலையம், (4—9—49) கொழும்பு, திரு. வ. கந்தையா:-தற்காலத்தார் இயற்றிய அரும பெரும பாடல்களை ஒருங்கு சேர்த்துப், பாடிய புலவர் வரலாறுகளையும் அடிக்குறிப்பில் சேர்த்து வெளியிட்ட முறை மேனாட்டு உயர் முறைகளோடு ஒக்கும். திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையின் சீரிய உழைப்பு தமிழ் உள்ள வரையும் போற்றப்படும். இதனைத் தொகுப்பதற்கு எவ்வளவு பணச் செலவும், காலச் செலவும, கல்வியும் வேண்டும் என்பதனைக் கற்றாரே அறிவர். பாட்டுக்களின் அரும பதங்களையும் சந்தர்ப்பங்கள் சிலவற்றையும் விளக்கியிருத்தல் மாண்புடைய செயலாகும்.

3. வானொலி நிலையம், சென்னை, (15—6—50) திரு. M. சண்முகசுந்தரம், M.A., L.T., புத்தக மதிப்புரையாக ஒலி பரப்பியதின் சுருக்கம்:—இதிலுள்ள பாடல்களை நுனிப்புல் மேய்ச்சலாகப் புரட்டுபவர்கள்கூடத் தமிழ் மொழியின் சிறப்புத் தமிழர்களால் பாராட்டப் பட்டுள்ளது போல் உலகத்தில் வழங்கும் வேறு எந்த மொழியும் எவராலும் இதுவரை புகழப்படவில்லை எனும் உண்மையினை உணராமல் இரார்......இச் செய்யுட்களைத் தேடித் திரட்டிய அரிய தொண்டு......தன்னலமற்றது; தமிழரின் போற்றுதலுக்கும் நன்றிக்கும் உரியது......இத்துடன் நிற்காது

இந் நூலாசிரியர் ஆராய்ச்சி மனப்பான்மையுடன் அதிக முயற்சி எடுத்துக்கொண்டு அப் பாடல்களைப் பாடியவர்களின் வரலாறு களையும், அப் பாடல்களில் ஆங்காங்கே குறிக்கப்பட்டுள்ள கதை களையும் மிகத் தெளிவாகவும் விரிவாகவும் தம குறிப்புரையில் புகுத்துள்ளார். இக் குறிப்புக்கள் தமிழைப் பற்றிய கதைக் களஞ்சியமாக அமைந்துள்ளன.

4. டாக்டர் மு. வரதராசனார், எம்.ஓ.எல், பி.எச். டி (8-1-51):- மொழியரசி தமிழன்பால் எழுந்த நல்லதொரு தொகுப்பு நூலாகும். தமிழ் மொழியின் தோற்றம் முதல் வளர்ச்சி நிலை களில் பல படிகளைக் குறித்துப் புலவர் பலரும் எழுதியுள்ள நல்ல கருத்துக்களை யெல்லாம் இந் நூலிற் காணலாம. தமிழ் மொழி வரலாற்றை அறியவும் ஆராயவும விரும்புவார்க்கு இது பயன்படும் என்பது உறுதி.

5. திரு. S. திருநாவுக்கரசு, M. A., L. T., தலைமை ஆசிரியர், திருவாவடுதுறை ஆதீன அம்பலவாண தேசிகர், உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளி, தஞ்சாவூர் :—தமிழின் தனிப்பெருமைகூறும் மொழியரசி என்னும நூலைக் கண்ணுறும ஒவ்வொருவரும அதன் நயங்கள் பலவற்றினும ஈடுபடுவார்கள் என்பதிற் சிறிதும ஐய மில்லை. சுவை செறியும பாடல்கள், அரிய குறிப்புகள் முதலி யன, அதன் சிறப்புகள் பலவற்றினும, குறிப்பிடற்குரியன. தமிழன்பைப் பெருக்கவும், தமிழ்ச் சுவையில் ஈடு படுத்தவும் இஃது ஒரு சிறந்த நூல் என்பதிற் சிறிதும் ஐய மிலலை. இதனைப் படித் துச் சுவைப்பவர் 'தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில் லடா' என்பதற் கிணங்கப் பெருமித மடைவர் என்பது திண்ணம்.

இந் நூலைத் தமிழர் ஒவ்வொருவரும் தம் கையகத்தே கொண்டு இடைவிடாது படித்துச் சுவைத்து அதன் இன்பிலே திளைத்துச் செம்மாந் திருக்கை பெருங் கடனாம். இந் நூலி லுள்ள பாடல்களைப் போல எளிமையும் இனிமையும் மிக்கவை வேறெங்கும் காண்ட லரிது. மொழியரசியில உள்ள பாடலகளை ஆக்கியோர்களுட பெரும்பாலோர் அமரகவி பாரதியாருக்குப் பின் தோன்றியவர்கள் ; அவர்கள் அவரைப் பின்பற்றியே. கற்றோரன்றி மற்றோரும், முதியோரன்றிச் சிறியோரும் உளங் கொளத் தக்க வகையில் தத்தம் பாடல்களை எளிதாக யாத் திருப்பது போற்றற் குரியது.

அங்குமிங்குமாக, இரண்டொரு இடங்களில் வரும் அருஞ் சொற்கள் ஏற்ற வகையில் நன்கு விளக்கப்பெற்றுள்ளன.

இஃது எல்லாச் சுவடி நிலையங்களிலும் தொடக்கப்பள்ளி முதல் மா பெருங் கல்லூரி வரை எல்லாக் கல்வி நிலையங்களிலும்

நீத்தல் விண்ணப்பமும் கதிர்மணி விளக்கமும்

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

செந்நெறிச் செல வுடைய மெய்யடியார்களது உடலத்தை இறை இலமாகப் பெற்று வெளிப்படும் தன்மையால் உண்டாகும் பேரின்பத்தையும், அப் பேரின்பத்தை அடையச் செயும் உலகப்பற்றெழி வினையையும் விளக்கும் பகுதி திருவாசகத்து நீத்தல் விண்ணப்ப மாகும். திருச்சதகம் நுதலும் பொருட்டோடு இயைபு கொண்டுள்ள நீத்தல் விண்ணப்பத்து ஓரைம்பது பாக்களும் மணிவாசகர் தம் இதயத்தில் கனிவு பிறந்து, கவிதை ஒளியுடன் அவர் தம் உள்ளத் துடிப்பினையும் பக்திக் காதலையும் உணர்

இருக்க வேண்டிய இன்றியமையாத நூலாகும். இந் நூற் பயிற்சியால் மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் பேறு பெறுவது உறுதி.

இந் நூலில் உள்ள இசை நயம் ஒன்றிய பாடல்கள், பள்ளிகளில் நாள் தோறும் அன்றிச் சிறப்பு விழாக்களிலும், நாடகங்களிலும் பாடற் குரியவை யாம்.

6. தஞ்சாவூர் சில்லா, ஊர்ச் சுவடி நிலையத் தலைமையாளர்கள் (The Local Library Authority, Tanjore) தங்கள் 8--1--51 ஆம் தேதிய 9-வது தீர்மானத்தால் 'எல்லாச் சுவடி நிலையங்களிலும் 'மொழியரசி' எனும் நூலைப் புத்தகத் தேவைப் பட்டியலில் (Library Indent) சேர்த்துக் கொண்டு விலைக்கு வாங்கி வைக்கும்படி இச் சில்லாவிலுள்ள எல்லா நூல் நிலைய மானேசர்களுக்கும் அறிவுறுத்துகிறார்கள்.

கிடைக்குமிடம் :—1. சாமி வேலாயுதம் பிள்ளை பி.ஏ., எல்.டி.,
1900, சிவன்கோவில் புதுத்தெரு, மானம்புச்சாவடி, தஞ்சாவூர்.
2. கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

வாற்ற லுடன் கிளக்கும் தன்மை வாய்ந்தவை. இத் தகைய பாடல்களை, அறிவும் உணர்வும் சுடர்ந் தின்புறும் வகையில், சுவை குன்ரு வண்ணம் பண்டித மணியார் ஆன்ற அனு பவத்தாலும் திருவாசகத்தோ டொட்டிய ஆன்ம உறவா லும் பகர்ந்த கதி ருரை ஊனுருவி, உயிருருவி, உள்ளுருவிப் பாயும் இசை அருவியாக விளங்குகிறது.

மணி வாசகரது கருத்தினை கண்ணிபோற் பிடிக்கும் கதிருரை, அரு ளொளியினைக் துலக்கி உடம்பையும் உணர்வையும் வளர்க்கும் புகழுடையது. மணிவாசகர் இறைவன் பிரிவால் அடையும் ஆற்ருமையினைக் கதிரேசர், உலக வியல்பு அறிந்து காட்டும் முறை, பயில்வார் உள்ளத்தை நீராய் உருகச் செய்யும் பான்மையது. இராக் காலத்து இருளைப் போக்கி உயிர்த் தொகைக்கு அறிவை யும் இன்பத்தையும் தரும் இள ஞாயிறு போன்று கதிருரை சிவம் பெருக்கும் இன்பத்தையே உருவாய்க் கொண்டு திகழ்கிறதினுன், கவிப் பொலியுடைய கதிருரை நடையின் ஒளி வழி, சிவத்தின் அருளொளி திருவாசகத்தில் விளக்க முற காண இயலும்.

அறிவுக் கலையும் ஆத்ம கலையும் தம துரையின் கண் ஒற்றுமை நலங் கொள்ளுமாறு, பண்டித மணியார் ஆர்வக் கனல் கொண்டு, உள் ளாழ்ந்த ஞான மோன உண்மைகளை எளிய முறையில் தெளிவு படுத்தி விளக்கிப் பின் துணி வுடன், பயில்வாரது மனதைத் துரியத் துயலில் நிலை நிறுத் திக் காட்டுந் திறன், திருவாசகத்தின் கலை இவரது ஆவி யில் பாய்ந்து கலந்த தன்மையினையும், அதன் உயிர்ப்பு இவர்தம் சிந்தனைக் குழலில் நிலவி விளையாடும் மென்மை யினையும் புலப்படுத்தா நிற்கும். இவரது கனிந்த உள்ளம், விண்ணப்பம் நுதலும் பொருளோடு ஒன்ருற்றுப் பட்டு நிற்பதினுன், இவரது உரையின் கண், தெய்வத் தமிழும் சைவத் துறையும் இன்ப நலம் தாங்கி ஞான விழுப்பம் பயக்கு மாற்றை நன்கு துணிந்து கொள்ளலாம். இதற்குச்

சார்பாகப் பண்டித மணியார் மேற்கோள்களை உரைப் பணியில் ஒற்றுமை காண அமைக்கும் திறனுன், கதிருரை யின் சிறப்பும் பேரொளியும் திகழ்ந் திலங்குவது பெரிதும் அறிந்து இன்புறற் பாலது.

இலக்கியச் சுவையின் சிறப்போடு பேரின்பமும் மாருது சுரக்கும் மணிவாசகரது சொல் வளத்தினையும் கருத்து வளத்தினையும் பண்டித மணியார் இன்பச் சிலிர்ப் புடன் உணர்ந்து வள்ளற் றன்மை வாய்ந்து தம் பேரறி வின் திறத்தால் ஆற் ெருழுக்காக அழ கொழுக பொருள் கூறிச் செல்லும் செலவு திருவாசகத்தின் பெருமையினை யும், உரையினது அருமையினையும் புலப் படுத்தா நிற்கும். பண்டித மணியார், தங் கருத்திற் கேற்ப சொற்களை உய்த் துணர்ந்து முன் பின் மாற்றிச் சீரியதோர் பொருளைக் காட்டும் துணிவும், அங் கங்கும் முடிபு தேற்றி ஏகும் மதி நுட்பமும் பல விடங்களிற் காணப்படுதலான், அவை யாவும் இவரது சாலச் சிறந்த உலகிய லறிவின் மிகுதியை விளக்குவ தாகும். சொற்களின் நிலை பிரித்து இனிமையும் நயப்பாடும் தோன்ற இழுக்கம் ஒன்றும் இன்ருகு மாறு பொருள் கூறும் இவரது பண்பின் திறம் ஒரொரு கால் நம்மை மொய் கொள் சிந்தைய ராக்கி நமதறிவையும் அப்படியே கொள்ளை கொள்ள வல்லதாய் வயங்குகின்றது.

நீத்தல் விண்ணப்பத்துப் பாக்களினது பொருள்களின் திட்ப நுட்பங்களை அறிந்து அவைகளை மீண்டும் பிறர் மனத்தே நிலை பெறச் செய்ய மணி யனைய செஞ் சொற்களை ஆய்ந் தெடுத்துத் தொகுக்கும் வன்மை பண்டித மணியா ரது இலக்கியப் புலமையினையும் இயற்கைக் கலைப் புலமை யினையும் வலியுறுத்தும். தெளி பொருளையும் தொனி பொருளையும் எடுத் தியம்புங் காலையிலும், ஒரா துரைத்து வழங்கப்படும் அயர்ச்சி யுரைகளை 'இயைபின்மையால் அஃது உரை யன்மை' என ஒதுக்கி, பண்டித மணியார்

மணிவாசகர் கருத் தறிந்து உரை மலர்த்தும் தம் முடிபுகளை செருக்கும் மிடுக்கும் காணு வாறு மறுத்தற் கொண்ணு வகையில் நிலை நிறுத்தி வனப் புற மெய்ம்மை தேற்றும் நுட்பம் இன்புறுதற் குரியது.

உளக்காட்சியான் நீத்தல் விண்ணப்பத்துப் பாக்களில் அழகியதும் இனியதும் சீரியதும் அறிந்து நயங்களையும் இலக்கியச் சுவை நலனையும் ஆய்ந் தாய்ந்து களித்து தெளி பொருள் கிளக்கும் கதிரேசரது உரை நம தறிவை மலரச் செய்து, கண்டு களிப்பதாலாய கடவுட் களிப்பு உண்டாகும் அருள் நிலை விழுப்பத்துத் துறையின்கண் நம்மை நாட்ட முறச் செய்கின்றது. இவரது சொல் லாற்றின் திறன் வழி, இறை யியல்பு பயன் றெரி வுடையதாய் ஆற்ற லுற்று இயங்குவதினுன், பண்டித மணியாரது உரை வியந்து அறிதற்கும் ஆய்தற்கும் ஏது நடை வாய்ந்து இன்புறுத் தும் பெற்றிமை யுடையது. மற்றும் நீத்தல் விண்ணப்பத் தில், நவில் தொறும் நல் லின்பம் நல்கி நினை தொறும் சுவை பயக்கும் உவமைகள் சிவ நெறி யுண்மையினை விழுமிய தாய் அறிவிக்கும் செப்பம் பொருந்தியவை யென்பது தோன்ற, பண்டித மணியார் அவைகளைக் கவினுற விளக் கும் வகை, இன்பம் பயப்பதோ டமையாது நம தறிவை யும் கூராக்கவும் வல்லது. இத் தகைய உணர்வுக்கு இன்ப மூட்டும் வகைகளாலே, பண்டித மணியார், திரு வாசகத் தேன் மலரிற் பொருந்திய விரை யெனப் பொலியும் தம் உரை மூலம், உயிர் இறைவன் பால் இரண்டறக் கலக்கும் முத்திப் பெரு நெறியினை விழைவதற்குப் பதி யன்புணர்த்தி பதியறிவை விளக்கி யருளியது பெரிதும் பாராட்டற் குரியது.

மெய் கண்டார்

(வேலூர்க் காரமுகன்)

மெய் என்னும் சொல் மெய்யையும், உள் பொருளையும், உண்மையையும் குறிப்பதுடன், திண்மையையும், நுண்மையையும், உண்மையையும், குறிக்காமலில்லை. திண்மை கட்புலனுக் கெட்டுகிறது; நுண்மை உணர்வாம் மெய்யறிவுக்குப் புலனாகிறது; உண்மை அறிவால் விளங்குகிறது. கட்புலனறிவும், உணர்வாம் மெய்யறிவும், அறிவும் ஒருங்கே பெற்ற பேரறிஞர்கள் பாரில் காண்டலரிது. என்றாலும் தமிழகம் பெற்ற பேற்றினாலும், நல்வினையாலும் திண்மை-நுண்மை—உண்மை இம் மூன்றையுமறிந் துணர்ந் துரைத்த உயர்புறு மிரு பெரியார்கள் தமிழகத்தில் தோன்றினார்கள். ஒல்காப் புகழுடைத் தொல்காப்பியரும், மெய்யைக் கண்ட மெய்கண்ட தேவரும் முப் பொருளுண்மைகளை இனிதே உணர்ந் தறைந்தனர். உலகம் ஐம் பூதங்களின் கலவை என்றும், உலகில் தோன்றும் உயிரினங்களை அறிவின் முதிர்வால் அறுவகை என்றும், இறைவன் இயல்பாகவே வினையிலே பற்றப்படாத அறிவுப் பிழம்பாகிய முனைவன் என்றும் கூறிய தொல்காப்பியர் உலகியலையும் உயிரியலையும் எழுத் தமைப்பில் அமைக்கையில் உயிர்தான் உடலை இயக்க வைக்கிற தென்பதற்கு 'உயிரில் இயக்க மின்மையான்' என்றும், உயிர் கட்புலனுக்குத் தோன்றாது உடல் வழி தோன்றும் என்றதற்கு 'மெய்யின் வழியது உயிர் தோன்றும் நிலையே' என்றும், உயிர் உடலுடன் இயைந்தாலும் உயிரின் இயல் திரியாது என்பதற்கு 'மெய்யோ டியையினும் உயிரியல் திரியாது' என்றும் விளக்கமான முறையில் மயக்க மற விளக்கியுள்ளார். உயிர்கள் பொருளொடு புணர்தல் என்றும் அருளொடு புணர்தல் என்றும் கூறியதைக் கூர்ந் தாராயுங்கால் உயிர்கள் முறையே திண்மையோடும் நுண்மையோடும் ஒன்றி உயர் நிலை எய்துதற்கு எண் வகைப் பண்பு பற்றிக் கட்டமைந்த ஒழுக்கத்தில் நின்று பீடுற வேண்டுமென்று தொல்காப்பியர் கூறியமைக்குத் தமிழகம்

என்றும் தலை நிமிர்ந்து நிற்கிறது. இவ் வுயரிய உயருண்மைகளை ஐயாயிர மாண்டுகட்கு முன்னர் உரைத்த தொல்காப்பியர், 'என்மனார் புலவர்' என்றியம்பியதை எண்ணுங்கால் வரலாற்றைப் பற்றி நின்றுரைத்தமை விளங்காமலில்லை. இறைவனை, 'முனைவன்' என்று தொல்காப்பியன் கூறியதும், சிவ பரம் பொருளை மணிவாசகர் 'முனைவன்' என்று கூறியதும், வினையிலே பற்றப்படாதவன் இறைவன் என்று தொல்காப்பியர் கூறியதும்; வினையே இல்லாதவர் சிவம் என்று மெய்கண்டார் கூறுவதும் பெரிதும் ஒன்றுக்கொன்று நிரம்பப் பொருத்தமாக இருப்பதால் தொல்காப்பியர் சைவ சமயத்தவர் என்று கருத இடந் தருகிறது. தொல்காப்பியருக்குப் பின்னர் (நாலாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்குப் பின்னர்) 'என்மனார் புலவர்' என்ற சொற்றொடருடன் மிகச் சுருங்கிய முறையில் அளவையியல் துணைகொண்டு உணர்வியலை அறிவியலால் அருந் தமிழ் நெறி நின்று உலகியலை, உயிரியலை, இறையியலைப் பைந்தமிழ்ப் பாமாலையில் பிறங்க வைத்த உவமையில்லாப் பெற்றிமை முத் தமிழக மீன்ற மெய்கண்டதேவருக் கன்றி வேறெவர்க்கு?

உலகை. அவன், அவள், அது என்று முப் பகுதிகளாக்கி இம் மூன்றும் தோன்றி, நின்று, மறைகின்றனவென்றும், இந் நிலை எய்துதற்கு வினைதான் காரணமென்றும், ஆதலால் வினையே இல்லாத ஒன்றால் தோற்றுவிக்கப்பட்டதென்றும், மலம் மாயாமையால் மீண்டும் ஒடுங்கி மலம் மாய்ந்து மாசற்ற நிலை எய்துதற்கு எவரிடம் ஒடுங்கியதோ அவர்தான் அனைத்தையும் தோற்றுவித்தவரென்றும் இனிதே அளவையியலில் அறைந்ததை ஆராயுங்கால் உயிர் வினையுடையதென்றும், வினையுடையதால் தோன்றி, நின்று, அழிகிறதென்றும், உயிரைத் தோற்றுவிக்கிற இறைவன் வினையற்றவனென்றும், ஆதலால் தோன்றி, நின்று, அழிவதில்லை என்றும் கூறியதுடன், தெரிவதனைத்தும் அழிகின்றனவென்றும், அழியாத ஒன்று தெரிகிறதில்லை என்றும், ஆதலால் இறைவன் தெரிவதில்லை என்றும், உயிர்கள்தான் உடம்புடன் தெரிகின்றனவென்றும் உணரவைக்கும் முறையில் அளவை நூலோர் நவின்றனர் என்று நவிலும் மெய்கண்டாரின் மாண்பு என்னே!

உயிர்களைத் தோற்றுவித்த இறைவன், உயிர்கள் மாயையினின்று தூய்மை எய்தப் பிறப்பு இறப்பு என்னும் வினை புரிய, உடலில் உயிர் கலந்திருத்தல் போல, உயிரில் கலந்து அவையாகி, தன் தன்மையில் வேறாகி இருக்கின்றான் என்று கூறுகையில், இறைவன், உயிர், உடல் ஆகிய இம் மூன்றும் வெவ்வேறு என்று விளங்கினும் இறைவன் உயிருடன் கலந்திருத்தல் தேற்றம்.

உயிர் இல்லை என்றும், காற்றுத்தான் உயிரென்றும், அறிவுதான் உயி ரென்றும் கூறும் மரபுக்கு, பூதமும், பொறியும், புலனும் உயிர் அல்லவென்றும், பூதமும் பொறியும் புலனும் ஈடு செய்ய வியலு மென்றுணர வைத்து 'நான் அல்ல' என்று கூறுவதாலும், ஐம் பொறிகளையும் அவைகளின் நீக்கத்தையும் அறியும் ஒன்று இருத்தலானும், உறங்குகையில் உணவும் செயலும் அற்று ஒன்று இருத்தலானும் உடம்பினுள் உயிர் ஒன்று வேறாகி யுள்ளது என்று துளக்கமற விளக்கும் பெற்றிமைக்கு யாது கூற வியலும்?

உயிர் அகக் கருவிகளுள் ஒன்று அன்று என்றும், உயிர் ஆணவ மலத்தால் கட்டுண்டிருப்பதால் பொருள்களைத் தானாகவே அறியாது என்றும், அமைச்சருடனிருக்கும் அரசன் போன்று உயிர் துன்பப்படுகிறது என்றும் விளக்குகிறார்.

உயிர் பொறிகளை அறிந்தாலும் பொறிகள் உயிரை அறிவதில்லை என்றும், அஃதே போன்று உயிருடன் கலந்த இறைவனை உயிர் அறிவதில்லை என்றும் கூறி, காந்தத்தின் முன் இரும்பு தொழிற்படுதல் போல யாவும் இயங்குகின்றன வென்று இயம்புகிறார்.

அறியு மியல்புடைய யாவும் அழிகின்றனவாதலின், இறைவன் அறியப்படுவானாயின் அழிவனென்று அறைந்து, அறியப்படாதவனெனின் இல்லாதவனென்று இயம்பி, உயிரறிவால் இறைவனை அறிய வியலாதென்றுரைத்து, இறை யறிவால்தான் அறியப்படுமாதலால் இறைவன் சிவசத்தென்றனர் பெரியோர் என்று பகர்கிறார்.

சிவ சத்தின் முன்னே அசத்துப் பொருள்கள் யாவும் அழிகின்றன வென்றும், சத்தாகிய சிவமும் அசத்தை அறிந் தனுபவியா தென்றும், அசத்தும் அறிவற்றதால் சத்தை அறிந்து அனுபவியா தென்றும், ஆதலால் உயிர் சத்தாகவும் அசத்தாகவு மில்லாமல் இரண்டையும் அறிந்தனுபவிக்கு மியல்புடைய தென்று மொழிகிறுர்.

பெருந் தவம் புரிந்த சரல்பினுல் இறைவன் குருவாகத் தோன்றி, அவ் வுயிர் இடர்ப்பட்டு மயங்கியதை மொழிய. அவ் வுயிர் ஐம்புல வேடரிடமிருந்து விலகி இறைவனேடு இரண்டற நிற்கும் நிலையை யுணர்ந்து இறையடி எய்து மென்று கூறுகிறுர்.

பசு ஞானத்தானும் பாச ஞானத்தானும் அறிய இயலாத கடவுளைக் கடவுளி னருளால் உள்ளத்தில் தேடிக் கொள்ள வேண்டு மென்றும், அவ்வாறு தேடிக் கொண்ட பின்னர் விரைந்து பரந்து செல்கிற பேய்த் தேரைப் போன்று பாசம் விலகியதும் ஐந் தெழுத்தை உச்சரிப்பின் கடவுள் ஞானமானது நிழல் போல் விளங்கு மென்கிறுர். ஞானக் கண்ணுல் கண்ட அம் முதல்வன் உயிர்களுடன் கலந்திருந்த அந்த பந்த நெறியைப் போன்றே பந்த மற்ற முத்தி நிலையிலும் அம் முதல்வனுடன் பிரிப் பற்று அவன் திருப் பணியைச் செய்யின் மல மாயையுடன் வல் வினையும் மாயு மென்று செப்புகிறுர்.

விழிக்குப் பொருளைக் காட்டித் தானும் காணும் உயிர் போல, உயிர் பொருள்களை அறிய, இறைவன் உயிருடன் கலந்து உயிருக் கறிவித்துத் தானும் அறிவதால், இறைவனி னுபகாரத்திற்கு அன்பு செலுத்தின் உயிர் இறைவனின் திருவடி எய்து மென் றுரைக்கிறுர்.

செம்மை மலராம் இறைவ னடியை எய்த வொட் டாது தடுக்கும் மும் மலத்தை மெய் யறிவால் கழுவி, மாறு அன்பு செய்து கொண் டொழுகும் அன்பருடன் கலந்து மல மயக்கம் மாய, அன்பு மிகுந்த அவரின் திரு வேடத்தை யும் திரு ஆலயத்தையும் முதல்வ னெனவே கண்டு வழி படுவ ரென்று பகர்கிறுர்.

தொல்காப்பியர் இறை, உயிர், மெய் இம் மூன்றிற்கும் விழுமிய இலக்கணம் செய்தார்; மெய்கண்டார் இம் மூன்றிற்கும் உயரிய இலக்கியம் கண்டார்.

இறைவன் வினை யற்றவ னென்றும், உயிர்களுக்கு வினை உண் டென்றும், மெய் அசத்துப் பொருளென்றும், மெய்யை இயக்குவது உயி ரென்றும், உயிரை இயக்குவது இறைவ னென்றும் இனிதே இயம்பி உடலை இயக்கும் உயிருக்கு உருவம் அவசிய மில்லை என் றுணர்த்தி உருவமே இல்லாத உயிர்களை இயக்குகிற இறைவனுக்கு உருவம் இருக்க வேண்டிய கட்டாயமே இல்லை என்று கூறும் உயர்வுக்கு உலகம் பாராட்டுகிறது.

தோன்றுவது அழியு மென்றும், அழிவதுதான் தோன்று மென்றும், இவ் விரண்டும் நடைபெறுவதற்கு வினைதான் மூல மென்றும், வினை யுள்ள வரை தோன்றி யழியு மென்றும், வினை யற்ற பின்னர்த் தோன்றி யழியா தென்றும் வினை யறுவதற்கு நல்வினை யாற்றப் பிறப்பு இறப்பு நிகழ்கின்றன வென்றும், இவை நடை பெற இறைவன் உயிர்களுடன் கலந்துள்ளா னென்றும் கூறும் விளக்கம் மயக்கத்தை மாய வைக்கிறது.

ஐம் புல னின்று உயிர் நீங்கித் தவம் பெரிதும் புரிந்து உயர் நிலை எய்துங் காலை முழு முதற் கடவுள் சிவ பரம் பொருள் உயிரின் உழைப்பை யறிந்து இரக்க முற்று குருவாகத் தோன்றி அருள் சொரிந்து ஆட் கொள்ளுவதை ஆராயுங்கால் படைப்பின் நோக்கம் உயிர்கள் இறைவனை யடைய இறைவனே அருள் சொரிகின்றான் என்று விளங்குகிறது.

உயரறிவால் கடவுளை அறிய வியலா தென்றும், மெய் யறிவால் கடவுளை அறிய வியலு மென்றும், அதற்கு நல் வினை யாற்றி இறைவனிடத் தன்பு செலுத்தின் இறைவன் அருள்பெற வியலுமென்றுங் கூறி, அருள் என்பது புலமை யால் ஆராய்ச்சியால்பெற வியலா தென்றும், புல னொடுக்கி ஐம் புல வேடர்களிடமிருந்து விலகி, அகலா தன்பு செலுத்தும் அன்பரின் இணக்கம் பெற்று வாழ வேண்டு மென்று கூறியதின் மாண்புக்கு உவமை இல்லை.

இறைவன் படைப்பை வெறுக்காது உலகை இழித்துப் பழிக்காது இயற்கை நெறி நின்று உயிரினங்கள் வாழவும், புல னொடுக்கி அன்பு செலுத்துதலே மேன்மையுடைத் தென்றும், உயர் நிலை எய்திய உயிர்களிடத்துக் கடவுளே தோன்றி அருளுகிருர் என்றும், இறைவன் ஒருவனே என்றும், உயிர்கள் பல வென்றும், இறைவனும் உயிரும் இரண்டறக் கலந்தாலும் இறைவன் வேறு என்றும், உயிர்கள் வேறு என்றும், வெம்பிய உயிருக்கு நிழல் நல்குவது ஐந் தெழுத் தென்றும், அளவை முறையில் அறிவியல் துணை கொண்டு இறை, உயிர், மெய் இம் மூன்றையும் இனிதே விளக்கிய மெய்கண்டார் நற்பொருளைக் கொண்டு சிவ நெறியைச் செப்பி சைவ சமயத்தை விளக்கி யுள்ளார். மற்றச் சமயத்தினர் சமயத்தை நிறுவி அற வுரைகளை அறைந்தனர். சைவ சமயத்தினர் நற்பொருள்கள் மீது இறையியல், உயிரியல், மெய்யியல் ஆகிய இம் மூன்றையும் ஒளிர வைத்து, இம் மூன்றிற்கு முள்ள தனிமையையும் பிணைப்பையும் பகர்ந்து அன்பால் ஆண்டவனை அடைய வேண்டு மென்று அறுதியிட்டு உறுதியுடன் உரைத்த உரைக்கும் உயர்வு என்னே!

இலங்கும் பொருளையும், பொருளை இயக்கும் இயக்கத்தையும், இயக்கத்தின் இயக்கத்தையும் கண்டு அறிந்து உணர்ந்து உரைத்த மெய்கண்டார் வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

அன்பே சிவம்,

யாழ் நூல்

பேராசிரியர் விபுலானந்த அடிகளார், பதினுன் காண்டு ஆராய்ந்து எழுதிய அரிய, சிறந்த இசை நூல்.

பொருள் பொதிந்தது. தோற்றம் பொலிந்தது. விலை மலிந்தது.

மெல்லிய தாள்	தாள் உறை	15—0—0
	துணி உறை	18—0—0
தடித்த தாள்	தாள் உறை	18—0—0
	துணி உறை	20—0—0

அஞ்சல் செலவு வேறு.